www.tamilarangam.net

T.I.B.

# செய்திக்கோவை

நிலவெம் 17

— மாசி - பங்குனி — 86.




**புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது அஞ்சலிகள்



மறைந்த தலைவர்
தோழர் ஸ்ரீ சபாரத்தினம்.

> சிந்தித்து செயல் புரிந்து, பொது எதிரியை அழிக்கும் இந்த வேளையில் நமக்குள் நாம் முட்டி மோதிக் கொள்வது தகுமா?
>
> சிந்தியுங்கள் தோழர்களே!
>
> விடுதலைக்காகப் புறப்பட்ட தோழர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும், நாம் அவர்களை மதிக்கின்றோம். மதிப்போம்.

சக இயக்க போராளிகளின் துப்பாக்கிக்கு பலியான,
தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவர் தோழர் ஸ்ரீ சபாரத்தினம்
அவர்களுக்கும்,
தம்மையொத்த போராளிகளின் வெறுமையான துப்பாக்கிக் குண்டுகளுக்கு
இரையான,
விடுதலைப் போராளிகளுக்கும்,
எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அவர்கள் சார்ந்த இயக்கத்திற்கும், போராளிகளின் குடும்பத்தார்க்கும்
அநியாயமாகக் கொல்லப்பட்ட பொது மக்களுக்கும்,
எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



> அண்மையில் தமிழீழத்தில் இயக்க முரண்பாடுகளால் ஏற்பட்ட
>
> ## கசப்பான சம்பவங்கள்
>
> தொடர்பாக, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் விடுத்துள்ள அறிக்கை:-

கடந்த சில நாட்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. மோதலைத் தவிர்க்கும் படியும், மோதலில் ஈடுபட்டிருக்கும் இரு இயக்கங்களும், இரு நட்பு சக்திகளேயன்றி எதிர்க்கட்சிகளல்லவென்றும், மோதலை நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்ப்பது தமிழீழ விடுதலைக்காகுமானதெனவும்" 02.05.86, அன்று 'தமிழீழத்தின் குரல்' வானொலியில் ஒலிபரப்புச் செய்திருந்தோம்.

ஆனால் தொடர்ந்தும் மோதல் உச்சக்கட்டத்தை அடைந்து, நூற்றுக் கணக்கான போராளிகளும், அப்பாவிப் பொது மக்களும் கொல்லப்பட்டதோடு மட்டுமல்லாது, இயக்கத்தின் தலைவரையும் படுகொலை செய்யுமளவிற்கு வளர்ந்து விட்டது.

இந்நடவடிக்கைகள் கூட்டுமொத்தமான தமிழீழ விடுதலைக்கு முட்டுக் கட்டையேயாகும். சொந்தக்கரங்களில் விடுதலையை முன்னெடுக்காது, பிற்போக்கு சக்திகளின் தூண்டுதலால் நடைபெறும் விடுதலைப் போராட்டமும், குறைந்த பட்ச வேலைத் திட்டமில்லாமல் இடம் பெறும் வெறும் விளம்பரத்திற்கான கூட்டுக்குள்ளும், இப்படியான மோதல்களை ஏற்படுத்துமென்பது விஞ்ஞான உண்மையாகும்.

இரு பக்கங்களிலும் ஏற்பட்ட பெருந்தொகையான சகதோழர்களின் இழப்பும், விடுதலையை பின்தள்ளி விட்டதென்பதை மறுத்துவிட முடியாது. நட்பு முரண்பாடுகளை பகை முரண்பாடாக எண்ணி செயற்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் கண்டிக்கத்தக்கவையே.

இம் மோதல்களில் உயிரிழந்த இயக்கத் தலைவர் தோழர் ஸ்ரீசபாரத்தினம் அவர்களுக்கும், சகதோழர்களுக்கும், சகோதரர்களுக்கும், எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், உயிரிழந்த சகதோழர்களின் குடும்பத்தார்க்கும், அவர்கள் சார்ந்த இயக்கத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் இவ் நேயமற்ற கொலைகளைக் கண்டிப்பதுடன், தொடர்ந்தும் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளாது, மக்களின் அபிலாசைகளை முதன்மைப்படுத்தி, சிக்கல்களை பேசித் தீர்க்க முயலவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கட்சிப் பயிற்சி, உட்கட்சி ஜனநாயகம் பற்றி

எல்.எம்.காகனோவிச்

அலுவலக வேலைகளும், பொருத்தீர்மானங்களை எழுதும் வேலைகளும் சிலருக்கு அதிகமான சுமையாகும் போது, அற்பமானவைகளையும் மனித இனத்தையும் மறந்து விடுகிறார்கள். அவர்கள் வளர்ந்து வருகின்ற, உயர்த்தப்பட வேண்டிய புதிய மேற்பார்வையாளரையும், புதிய பொறியியலாளரையும், புதிய தொழில்நுட்பக் கலைஞரையும், வேலையில் வீரரான புதியவர்களையும், இளம் கம்யூனிஸ்டுகளையும் பார்க்கத் தவறுகிறார்கள்.

நம்மிடம் போதுமான ஆட்கள் இல்லை என்கிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. நாம் மனிதர்களை, தகுதியான மனிதர்களைக் கொண்டுள்ளோம். நாம் அவர்களை உயர்த்தி சரியான இடத்தில் அமர்த்த வேண்டும். அவர்களைச் சரியாக தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும். ஒரு வேலையில் அமர்த்தும் போது அவர்களுக்கு பயிற்சியளித்து வேலையின் வளர்ச்சி முறையின் மூலம் அவர்கள் உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் சோர்ந்து தாசிபடிந்து விடாமல் பாதுகாக்கப்படல் வேண்டும். அவர்களின் மீதுள்ள தூசியை அவ்வப்போது துடைத்தெறிய வேண்டும். கட்சியின் அமைப்புகளில் உறுப்பினர்களைச் சேர்ப்பது என்பது பாதிவேலைதான். புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கட்சி உறுப்பினர்கள், தத்துவரீதியாகத் தம்மைத் தயார் படுத்திக் கொண்டு வளரவும், அன்றாட வேலைகளில் அறிவுரை பெறவும், கட்சி வேலைகளிலீடுபட்டு அரசியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படவும் கவனம் செலுத்த வேண்டும்.

மார்க்சிய-லெனினியப் பயிற்சி என்று கூறும்போது வகுப்பறையை மட்டுமல்லாது போல்ஷ்விக்குகளின் தத்துவ ஆயுதத்தையும் குறிப்பிட்டிருக்கிறோம். கட்சி பள்ளிகளில் உறுப்பினர்கள் பயிற்சி பெறவேண்டும். ஆனால் கொள்கை ரீதியாக-நடைமுறை அரசியல் வேலைகளில் பயிற்சி பெறவேண்டும். அதாவது நம் கட்சி உறுப்பினர்களின் மார்க்சிய-லெனினிய பயிற்சியை உயர் நிலைக்கு கொண்டு வருவதோடு, கட்சி ஸ்தாபன வேலைகளையும் உயர்த்த வேண்டும்.

லெனின் எப்போதும் தத்துவார்த்தப் பிரச்சனைகளை அன்றாட வேலைகளுடன் இணைத்தார். ஸ்டாலின் மிகக் கடினமான தத்துவார்த்த பிரச்சனைகளை அன்றாட போராட்டத்துடன் இணைப்பதெப்படி என்பதற்கான உதாரணங்களை கொடுத்தார்.

இப்போது நமது புரட்சிகர பேராசிரியர்கள் தத்துவத்தை ஒரு பெட்டியிலும், நடைமுறையை மற்றப் பெட்டியிலும் போடுவதோடு இரண்டையும் இணைக்கத் தெரியாது விழிக்கின்றனர். அரதிட்டமாக தத்துவத்தையும் நடைமுறையையும் இணைப்பதற்குப் பதிலாக, கதைகளில் வரும் தத்துவ ஞானிகளைப் போல் 'கயிற்றின் தன்மை' பற்றி பெரிய கட்டுரைகளை எழுதுகின்றனர். மார்க்ஸ், எங்கெல்சு ஆகியோர் இதைப்பற்றி ஏதும் கூறாதது போலவும், மார்க்சிய-செல்வத்திற்குத் தாங்கள் சிறந்த பங்கைச் செலுத்துவதாகவும் நினைத்துக் கொள்கின்றனர்.



நமது சோவியத் கட்சிப் பள்ளிகள் சில, கட்சிப்பள்ளிக்கூட முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் மிகவும் துன்புறுகின்றனர். ஒரு போல்ஷ்விக் என்பவன் பள்ளிச் சிறுவனல்ல. அவனுக்கு அரசியல் ரீதியாகப் பயிற்சி அளிக்கப்படுவதோடு, அவனது கல்வியானது அன்றாட அரசியல் மற்றும் நடைமுறைப் போராட்டங்களோடு இணைக்கப் படவும் வேண்டும்.

அவன் கட்சிப் பள்ளிகளிலும், கட்சிக் கூட்டங்களிலும் தத்துவ ரீதியாக தகுதி பெற வேண்டும். இந்தப் புதிய விதியின் நகல் பயிற்சியை மட்டும் கூறவில்லை, என்பதை உணர்ந்திருப்பீர்கள். இது ஒரு கம்யூனிஸ்டை தத்துவ வாதியாகவும் உருவாக்குவதற்கான தயாரிப்பாகும். ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் தத்துவரீதியாக மார்க்சிய-லெனினியத்தில் பயிற்சி உள்ளவராகத் தங்களைத் தகுதியாக்கி கொள்ள வேண்டும்.

இந்தத் தேவைகளைக் கட்சி உறுப்பினர்களுக்குக் கூறுகிறோம் என்றால் - கட்சித் தலைவர்களுக்கு என்ன சொல்ல வேண்டும்? சிறந்த பிரச்சாரகருக்கும் சிறந்த அமைப்பாளருக்கும் இடையே வேற்றுமை ஏதுமில்லை. தனித்திறமை பெறுவது என்பது சிறந்ததுதான். நாம் அதை ஆதரிக்கிறோம். எனினும் அதன் எல்லைக்குச் சென்றுவிடக் கூடாது. அதிகமான தனித்திறமை என்பது குறிப்பாகக் கட்சி வேலைகளுக்குப் பொருந்தாததாகும்.

ஒரு அமைப்பாளர், பிரச்சாரமோ போராட்டமோ, செய்யாததன் காரணம் அதற்கு நேரமில்லாதது மட்டுமல்ல. வெளிப்படையாகக் கூறினால் அவரால் செய்ய இயலாது என்றே கூறலாம். ஒரு தொழிற்சாலை நிர்வாகிக்கு சிறந்த அறிவு வேண்டும் என்பது நமக்குத் தெரியும். அதனால் தான் ஒவ்வொரு கட்சிக் கமிட்டி செயலாளரையும், மாவட்ட கமிட்டி செயலாளரையும், கட்சி அமைப்பாளரையும் மார்க்சியம்-லெனினியம் என்ற திசை காட்டும் கருவியை பயன்படுத்தும் திறமையை வளர்த்துக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம். கட்சித் தலைவர் என்பவர், அதன் சிறந்த பொருளில் கூறுவதென்றால், அமைப்பாளர், நிர்வாகி என்பதோடில்லாமல் சிறந்த பிரச்சாரம் செய்பவராகவும், கட்சி உறுப்பினர்களுக்குக் கற்றுக் கொடுப்பவராகவும் இருக்க வேண்டும்.

கட்சிக் கூட்டங்களில் அளவு அதிகரித்துள்ளது என்பது நமக்குத் தெரியும்-போல்ஷ்விக் முறையை, கட்சிக் கூட்டங்களில் இல்லாவிடினும், கட்சிப் பள்ளிகளிலாவது கற்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வார்கள்.

உட்கட்சி ஜனநாயகம், சுயவிமர்சனமென்பவை கட்சி உறுப்பினர்களின் கல்விக்கும், கட்சி வேலைக்கும் முக்கியமான ஆதாரமாகும். உட்கட்சி ஜனநாயகமென்பது ஒரு புதிய நிலைக்குயர்ந்துள்ளது. உட்கட்சி ஜனநாயகமென்பது ஒரு புதிய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டுகளின் கூட்டத்திற்கு - இப்போது சென்று பார்த்தால், சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையோடு அவைகளை ஒப்பிட முடியாததை நீங்கள் உணர முடியும்.

அமைப்பாளர்கள், பிரச்சாரகர்கள் ஆகியோரின் வேலையை இணைப்பதில் பெற்ற வெற்றிகளை மேலும் அதிகமாக்க முடியுமென்பதை நம்மால் மறுக்கமுடியாது. இது கம்யூனிஸ்டுகளின் மார்க்சிய-லெனினியத் தத்துவார்த்தத் தகுதியை -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-மேலுமொரு புதிய நிலைக்கு உயர்த்தும். தீவிரமான தயாரிப்புகளில்லாமல் கட்சிக் கூட்டங்கள் இப்போதும் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன.

எல்லோரும் ஒன்று கூடி, தோழர்களே! நமக்குச் சில பணிகளுள்ளன. - அதை நிறைவேற்ற வேண்டும்! என்று கூறுவர். அல்லது சில நடவடிக்கைகள் பற்றியோ அல்லது ஆண்டு விழா பற்றியோ விவாதிப்பார்கள். இது போன்ற கூட்டங்கள், கட்சி உறுப்பினர்களுக்கு கல்வியளிக்க உதவாது. எனவே, ஒவ்வொரு கட்சிக் கூட்டமும் கம்யூனிஸ்டுகளின் தத்துவ அறிவை மேலும் உயர்த்தும்வகையில் அமைய வேண்டும்.

உட்கட்சி கேள்விகளைப் பற்றிய விவாதங்கள், அரசியலைப் பற்றியும் . சோசலிசத்தைக் கட்டுவது பற்றியும், உறுப்பினர்களின் அறிவுத் திறமைபற்றியும் போல்ஸ்விக் தலைமை, தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்பது பற்றியும், வெகுஜனங்களின் அமைப்பு என்பது பற்றியும் விவாதிக்கும் வகையில்அமைய வேண்டும்.

கட்சிக் கொள்கை பற்றிய செயல் ரீதியான விவாதத்தின் மூலம் கட்சி உறுப்பினர்கள் கல்வி பெறலாம். உறுதிபெறுவதோடு வளர்ச்சியும் அடையலாம் அதே நேரத்தில் கட்சியின் அடிப்படைப் பிரச்சனைகளில் இருந்து விலகுகின்ற, அக்கொள்கையை அளிப்பதற்கு இவ் விவாதத்தைப் பயன்படுத்துகின்ற, கட்சித் தலைமையை பலவீனப் படுத்த முனைகின்ற, உறுதியான அணிகளை உருக்குலைக்க முனைகின்றமுனைகின்றவர்களை எதிர்த்து போராட்டத்தின் மூலம் உறுப்பினர்கள் கல்வி பெறுவதோடு உறுதியும் அடைகின்றார்கள்.

கட்சி உறுப்பினரிடையே நெருக்கத்தையும், ஒற்றுமையையும் உருவாக்குகின்ற போராட்டத்தின் மூலமும், கட்சிக் கொள்கையை விட்டு விலகுகின்ற, லெனினியத்திலிருந்து விலகுகின்ற, நபர்களை எதிர்த்து போராட்டத்தின் மூலமும் கட்சி உறுப்பினர்கள் வளர்ச்சி அடைவதோடு, உறுதியும் பெறுகிறார்கள் என்பதையும் இந்த உட்கட்சி ஜனநாயக வாழ்க்கை அனுபவம் நமக்குத் தெரிவிக்கிறது.

எனவே தான், நமது உறுப்பினர்களின் மத்தியில் ஏற்படும் மிகச் சிறிய - சந்தர்ப்பவாதப் போக்கையும் எதிர்க்கும் போராட்டத்தைத் தொடர்வதன் மூலம் கட்சி உறுப்பினர்களை உறுதிப்படுத்தவும், உயர்த்தவும் முடியும்.

கட்சி உறுப்பினரின் வளர்ச்சி என்பது, உட்கட்சி வேலைகளை அமைக்கும் விதத்தையும், கட்சி உறுப்பினர்களின் மீது நமக்குள்ள கவனத்தையும், அவர்களை தலைமை தாங்கி நடத்திச் செல்ல நாம் மேற்கொண்டுள்ள முறைகளையும் பொறுத்து அமைகிறது.

> ''முன்னணி ஊழியர்கள் மார்க்சியத்தில் இருந்து நழுவுதல், புதியவற்றை உணரும் தன்மை அற்று இருத்தல் விமர்சனத்திற்கும், சுயவிமர்சனத்திற்கும் தம்மை உட்படுத்துவதில் இருந்து நழுவுபவர்களை மக்களுக்குத் தோலுரித்துக் காட்டவேண்டும்''
>
> — மாவோ



# தமிழீழச் செய்திகள்

01.02.86.

31.01.86 அன்று, 94,000 இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க வகை செய்யும் சட்டமூலம் ஸ்ரீலங்கா - பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

*

* மூன்று நாட்களாக திருமலை கட்டை பறிச்சான் பகுதியில் முப்படையினரின் தாக்குதல்களின் போது, 30ற்கும் மேற்பட்ட பொது- மக்கள் கொல்லப்பட்டும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பல பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டுமுள்ளனர்.

* மலையகப் பகுதியில் தூண்டிவிடப்பட்ட - சிங்களக் காடையர்களால் நடாத்தப்பெற்ற கலவரங்களின் போது, தமிழ், சிங்கள, முஸ்லீம் உட்பட சுமார் 7000 பேர் அகதிகளாக்கப்பட்டு 3அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

* ஒரு வாரத்திற்கு மேலாக முல்லைத்தீவுப் பகுதியில் நடைபெற்ற இராணுவ அட்டூளியங்களில் 50ற்கும் மேற்பட்ட தமிழர்கள்கொல்லப்பட்டுள்ளதுடன், ஏராளமான தமிழர்களின் உடமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.
தண்ணீர் ஊற்றுப்பகுதியில் சின்னத்தம்பி என்பவர் உயிருடன் எரியூட்டிக் கொல்லப்பட்டார்

* கிளிநொச்சிப் பகுதியில், ஒரு வாரகால- மாக இடம் பெற்ற தாக்குதல்களில், 100ற்குமேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ள- தோடு, போராளிகளின் எதிர்த்தாக்குதல்களின் போது பல இராணுவத்தினர் இறந்துள்ளனர்.

04.03.86.

ஸ்ரீலங்காவின் சுதந்திரமான 04.02.86 ல் மட்டக்களப்பில் முழுநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கொழும்பு புறப்பட்ட புகையிரதம் வந்தாறுமூலையில் வைத்து போராளிகளால் திருப்பியனுப்பப்பட்டது. சகல அரச அலுவலகங்களிலும்துக்க அனுஷ்டிப்பாக வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டதாயினும், தாமதித்து வந்த இரா- ணுவம் அவற்றை அகற்றியதுடன், ஏராவூரில்- நான்கு தமிழர்களை சுட்டுக்கொன்றுமுள்ளது.

.* வறட்டவில் உள்ள இல.தோ.தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகம் சிங்களக்- காடையர்களால் தாக்கப்பட்டுநொறுக்கப்பட்டது.

* பட்டிருப்பு தொகுதி முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திரு. கணேசலிங்கம்அவர்கள் சென்னையில் மாரடைப்பினால் கால- மானார்கள்.

07.02.86.

எப்போதிருந்து ஸ்ரீலங்கா அரசு தன்னிச்- சையாக இராணுவத்தீர்விற்கு முயன்றவருகின்றதோ, அன்றில் இருந்து அரசியல் தீர்விற்கு முயற்சி செய்வதில் நியாயமில்லை- எனவும், இனப்பிரச்சனை தீர தனிநாடொன்று தான் ஒரே வழியென்றும், இல.தோ தொழிலாளர் சங்க முன்னணி தெரிவித்து- ள்ளது.

* யாழ் மானிப்பாயப் பகுதியில் இரா- ணுவ அட்டூளியங்களைக் கண்டித்தும், பாதுகாப்பு வலையங்களைக் கண்டித்தும் ஏராளமான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி - ஒன்றை நடாத்தியுள்ளவர்.

08.02.86.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் - இராணுவ மேஜர் ஒருவர் இராணுவத்- தாலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திருமலை தம்பலகாமம் இராணுவ முகாமிலும் இராணுவத்தினரிடையில் ஏற்பட்ட- மோதலில், மூன்று இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

* அண்மையில் வவுனியா கொக்குவெளிக்- காட்டிற்கருகில் காரில் சென்ற 5 தமிழர்களை இராணுவம் உயிருடன் எரித்துக்- கொன்றுள்ளது.

12.02.86.

வடக்குக், கிழக்கு கரையோரக் கடற்பிரதேசத்தினை பாதுகாப்பு வலையமாக - ஸ்ரீலங்கா அரசு மீண்டும் பிரகடனப்படுத்தியுள்ளது. இப் பாதுகாப்பு வலையம் வடக்கே பருத்தித்துறையில் இருந்து கிழக்கே- மட்டக்களப்பு வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



19.02.86.

மாலை 5மணியளவில், 2ஹெலிகொப்டர் உட்பட 5இத்தாலிய குண்டு வீச்சு விமானங்களில் வந்த ஸ்ரீலங்கா விமானப்படையினர், யாழ் பகுதிகளில் குண்டு வீசித்தாக்கியதில், மாவிட்டபுரம், சுழிபுரம், இளவாலை, இணுவில், கொக்குவில், கோண்டாவில், கொழும்புத்துறை ஆகிய கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 3 குழந்தைகள் உட்பட 20ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

20.02.86.

அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுத புரமென்ற கிராமத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் வெறியாட்டம் நடாத்தினர். 100ற்குமேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன், அனேகரது சடலங்கள் வயல்களில் வைத்து தீயிடப்பட்டுள்ளன. 10.ற்குமேற்பட்ட பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். 60 ற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்

* சமீபத்தில் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தினால் உலகின் மனித உரிமைகளின் நிலை பற்றிய அறிக்கையில், இலங்கையில் அதிகளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதென்றும், சிறுபான்மைத் தமிழ் மக்கள் அரச படைகளினால் பாரபட்சமாக சுட்டுக் கொல்லப்படுவதாகவும், அவ்வறிக்கையில் அதி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது

26.02.86.

இலங்கையில் தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் படு கொலை செய்யப்பட்டு வருவது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் திரு.பகத், இந்திய லோகசபாவில் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார். இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தான் ஒரே வழியெனக் கூறிவரும் ஜே.ஆர்.மறுபுறத்தில் இராணுவத் தீர்வை மேற்கொள்ள விரும்புகிறார் என்று கூறினும், திரு.பகத் சபையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

* இலங்கையில் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் தன்னாட்சிப்பகிர்விற்கு ஜே.ஆர். ஆவன செய்யாத வரை, அனைத்துலக அரங்கில் இருந்து இலங்கைக்கான நிதியுதவிகள், ஒத்தாசைகள் புரியும் நாடுகள், அவ்வுதவியை நிறுத்த வேண்டுமென, அனைத்துலக மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

* தமிழர் பிரச்சனைக்கான தீர்வு... போது பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு குறிப்பிட்ட காலத்திற்குள் நடாத்தி முடிக்க வேண்டுமெனவும், இதன் காலக் கெடு ஒரு மாதத்திற்கு கூடியதாக இருக்கக்கூடாதெனவும், இந்திய லோகசபாவில் அமைச்சர் திரு.பகத் கூறியுள்ளார்.

மேற்படி அமைச்சரின் கூற்றின் படி ஒரு மாத காலத்துள் இலங்கை அரசு தீர்விற்கு முன்வராவிடில், இந்திய அரசின் அடுத்த நடவடிக்கை என்ன? என்ற கேள்விக்கு திரு.பகத் பதிலேதும் கூற முன்வராததால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

27.02.86.

ஸ்ரீலங்கா விமானப் படையினர் மாதகல் சுருவில், இணுவில், கொக்குவில் பகுதி... மீது குண்டு வீசித் தாக்கியதில் 10பே... மக்கள் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர். பல வீடுகள் எரிந்துள்ளன.

02.03.86.

இந்திய மண்டபம் அகதிகள் முகாமில் அம்மை நோய் பரவியதைத் தொடர்ந்து, 4பேர் இறந்துள்ளனர். 49பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

03.03.86.

வணபிதாக்கள் சிங்கராயரும், சின்னராசாவும் நிரபராதிகளென கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பளித்து வணபிதா சிங்கராயரை விடுதலை செய்தது. அன்றைய பிற்பகல் வேறு குற்றங்களைக் காரணம் --



--காட்டி வணபிதா சிங்கராயர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

* நயினாதீவுக் கடற்கரைப்பகுதியில் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலில், கடற்படையினர் கொல்லப்பட்டதையடுத்து அப்பகுதி மீனவர்களின் படகுகள், குடிசைகள் போன்ற வற்றை அரச படையினர் தாக்கி சூறையாடியுள்ளனர். மேலும் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, பலாலி, மயிலிட்டி, ஆகிய பகுதிகளில் அரச படையினர் ஹெலிகொப்டர்களிலிருந்து தாக்கியுள்ளனர்.

04.03.86.

தொடர்ந்தும் நயினாதீவுப்பகுதியில் தாக்குதல் நடாத்திய இராணுவத்தினர் சுமார் 20பேரைச் சுட்டுக் கொன்றுள்ளதுடன் பலரைப் படுகாயப்படுத்தியுள்ளனர். பல பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டதன்பின் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளனர். நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் தாக்கப்பட்டு ஒரு பகுதி எரியூட்டப்பட்டது.

05.03.86.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா அரச படையினர் மனித உரிமைகளை மீறி வருவது அதிகரித்துள்ளதாகவும், தற்போது இவை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் --க் கூட்டத்தில் இந்தியக் குழுவின் தலை... டாக்டர்.டிலோன் தெரிவித்துள்ளார்

06.03.86.

நயினாதீவுப்பகுதி மக்கள் மீது தாக்குதல் நடாத்தும் பொருட்டு குறிகட்டுவான் நோக்கி சென்று கொண்டிருந்த பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற விசேட ஸ்ரீலங்கா இராணுவப் பிரிவொன்றுடன் எதிர்பாராவிதமாக எதிர் கொண்ட கழக அதிரடிப் படையினர் நேரடித் தாக்குதலை மேற்கொண்டதில் ஸ்ரீலங்கா இராணுவம் பின்வாங்கச் செய்யப்பட்டது.

* மன்னார் பாலம்பிட்டிக் கிராமத்தில் பொது மக்கள் மீது வெறியாட்டம் நடாத்திக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா அரசபடைகள் மீது, மக்களைப் பாதுகாக்கும் --

--பொருட்டு, கழக அதிரடிப்படையினர் எதிர்த்தாக்குதலை மேற் கொண்டனர். பாரிய இழப்புகளுக்குள்ளான இராணுவம் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து வண்ணம் பின் வாங்கினர். இதன்போது கழகத் தோழர் குமர சாமி சிவானந்தன் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

08.03.86.

அரச படையினரால் பெண்கள் கைது செய்யப்படல், சித்திரவதைகளுக்குள்ளாதல், மற்றும் துன்புறுத்தல் போன்றவற்றிற்கெதிராக யாழ்ப்பாணத்தில் 1000 ற்கும் மேற்பட்ட பெண்கள் பங்களிப்பில், மாபெரும் பேரணியொன்று நடாத்தப்பட்டுள்ளது.

12.03.86.

வல்வெட்டித்துறைப்பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் 3 விமானங்களில் இருந்து குண்டு வீசித்தாக்கினர். தொடர்ந்து வந்த 3 ஹெலிகொப்டர்களில் இருந்து தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இவற்றின் போது ஒரு வயோதிபர் அவரின் மனைவி மற்றுமொரு சிறுவன் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதேதினமிரவு கடற்படையினர் கடலில் இருந்து வல்வெட்டித்துறையை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர்.

11.03.86.

திருமலை கோணேசுவரர் ஆலயம் இராணுவத்தால் தாக்கப்பட்டதில், சில பகுதிகள் முற்றாக சேதமடைந்துள்ளது. அத்துடன் கோவிலினுள் நின்ற மக்களும் வெளியே இழுக்கப்பட்டு தாக்கப்பட்டனர்.

15.03.86.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப விரும்பினால் காலை 8மணியிலிருந்து, மாலை 4 மணி வரை இராமேஸ்வரம்-தலைமன்னார் வழியாக வரலாமென அத்துலத் முதலி அறிவித்திருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த யாழ் தேவி புகையிரதம் பரந்தனை அடையுமுன் தடம் புரண்டது. இச்சம்பவம் மதகு ஒன்று தகர்க்கப்பட்டதாலேயே ஏற்பட்டதென்றும், இதற்கு இராணுவமே காரணமெனவும் கூறப்பட்டுள்ளது. இதன் போது 5 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 30 பேர் படுகாயமடைந்தனர்.

* இலங்கையில் கடற்தளமொன்றைப் பெறுவதற்காகவும், இந்துமா சமுத்திரத்தில் இராணுவ மயமாக்கலுக்காகவும், அமெரிக்க அரசு இலங்கையைப் பயன்படுத்தி வருவதாக 'பட்னாவில்' நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ் 13வது மாநாட்டில் அமெரிக்க அரசு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

19.03.86.
பிரிட்டிஷ் பந்தோபஸ்து நிபுணர்கள், பாகிஸ்தான் இராணுவத் தொடர்புகள், இஸ்ரேலிய புலனாய்வு நிறுவனங்களின் ஸ்ரீலங்கா அரசுடனான தொடர்புகள்பற்றி இந்திய அரசு முதன் முறையாக பகிரங்கமாக சுட்டிக் காட்டி தமது கவலையைத் தெரிவித்துள்ளனர்.

* கிளிநொச்சி 2ம் வாய்க்கால் என்ற இடத்திலுள்ள 30 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல்களை இராணுவத்தினர் தீயிட்டு சாம்பலாக்கியுள்ளனர்.

* வடக்கு கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அரசு கட்டுப்பாடு விதித்தமையை எதிர்த்து 3000 ற்கும் மேற்பட்ட மக்கள் யாழ் நகரில் கண்டன ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளனர்.

21.03.86.
இலங்கையில் தற்போதுள்ள நிலைமைகள் இந்தியாவைச் சோதிப்பதாக உள்ளதென்றும், கடுமையான அளவிற்கு ஆத்திரமூட்டும் செயல்கள் நடந்து வருகிற போதிலும் மிகுந்த பொறுமையினை இந்தியா காட்டி வருகிறதென்றும், இந்திய வெளிவி

--காட்டி வருகிறதென்றும், இந்திய வெளிவிவகாரத் துணை மந்திரி, திரு. கே. ஆர். நாராயணன் இந்திய லோக சபாவில் தெரிவித்துள்ளார்.

24.03.86.
இலங்கை அரசு இனப்பிரச்சனையில் இராணுவத் தீர்வையே விரும்பும் பட்சத்தில் அத் தீர்விற்கு உதவுவதில் இந்தியாவிற்கு பங்கேதும் இருக்காதென்றும், தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படும் வரை அரசியல் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பேதும் இருக்காதென இந்திய வெளியுறவு அமைச்சர் பகத் இந்திய லோக சபாவில் தெரிவித்துள்ளார்.

* ஓமந்தையில் வைத்து இனம் தெரியாத குழு ஒன்றினால், யாழ் தேவி கடுகதி புகையிரதம் வழிமறிக்கப்பட்டு பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டதன் பின்பு அப் புகையிரதப் பெட்டிகள் யாவும் தீயிடப்பட்டுள்ளதுடன், அதன் எஞ்சினும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

*******
***********
*******

**விமர்சனங்களை வரவேற்கிறோம்!**

தமிழீழ தகவல் நடுவம், தொலைபேசி வழி, செய்திச் சேவை பற்றிய, செய்திக் கோர்வை பற்றிய, கழகம் சம்பந்தமான ஆக்கபூர்வமான விமர்சனங்கள், கருத்துக்களை,
தமிழீழ தகவல் நடுவம் தோழமையோடு வரவேற்கிறது.

-விமர்சனங்களால்-
குறைகளைக் களைவோம்!

தமிழ் - 01-470 6270.

ஆங்கிலம், 01-552 5970.

# லிபியாவில்
# அமெரிக்க ஆக்கிரமிப்பு ஒழிக!

லிபியாமீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திய அமெரிக்காவை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது!

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாகரிக பண்பாட்டை மீறி அமைதி விரும்பும் லிபிய மக்கள் மீதும் குண்டுகள் பொழிந்துள்ள கேடு கெட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நாம் ஆக்ரோஷத்துடன் கண்டிக்கின்றோம்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையிலுள்ள கொள்ளைக்காரர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த சர்வதேச பயங்கரவாதமானது, இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டுவந்துள்ள நீண்ட பட்டியலில் மேலும் ஒரு நடவடிக்கையாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத் திட்டங்களுக்குத் துணை போவதாக இந்த நாடுகளின் கொள்கைகள் இல்லாமலிருப்பதே இவ்வித கொலைச் செயல்களுக்குக் காரணமாயிருக்கிறது.

★ ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளே ஒன்றுபடுக!

★ உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுக!

★ ஏகாதிபத்தியம் ஒழிக!!

► 16.04.86, அன்று சென்னை அமெரிக்கத் தூதராலய முன்பாக, மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்டுள்ளது.
இதன் போது, ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) உட்பட பல முற்போக்கு சக்திகளும் கலந்து தமது ஏகாதிபத்தியத்திற்கெதிரான கோஷங்கள் எழுப்பியுள்ளனர்.

► 17.04.86, அன்று சுவிற்சர்லாந்தின், பேர்ன் நகரில், மேற்படி அமெரிக்கத் தாக்குதல்களைக் கண்டித்து, முற்போக்கு சக்திகளால் நடாத்தப் பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், கழக சுவிஸ் கிளையினரும் கலந்துகொண்டு, ஏகாதிபத்தியத்திற்கெதிரான சுலோகங்களையும், கோஷங்களையும் எழுப்பியுள்ளதுடன், துண்டுப்பிரசுரமொன்றும் கழகக் கிளையால் வெளியிடப்பட்டுள்ளது.

► 17.04.86, அன்று யாழ் நகரில், மேற்படி தாக்குதல்களைக் கண்டித்து, நகரெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து மக்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

► 19.04.86, அன்று ஜேர்மன்-ஸ்ருட்காட் (STUTTGARD) பகுதியில், முற்போக்கு சக்திகளால் நடாத்தப்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், கழக-ஜேர்மன் கிளையும் கலந்து கொண்டு, தமது ஏகாதிபத்திய எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

# மரணித்தும் வாழும் மறவர்கள்

தமிழீழ மக்களின் விடுதலையே தமது நோக்கமாகச் செயற்பட்டு தமிழீழத்தின் மற்றைய குடும்பங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து இறுதிநேரத்திலும் இராணுவத்திற்கு அடிபணியாது வீர மரணமெய்திய தோழர்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது வீரவணக்கத்தைத் தெரிவிக்கிறது.

நிலாவணை

தோழர் பூபாலபிள்ளை கதிரவேலு
,, சரவணர் சிறீதரன்
,, சாமித்தம்பி தவராஜா
,, கந்தையா தர்மலிங்கம்

பாலம்பிட்டி (மன்னார்)

தோழர் குமாரசாமி சிவானந்தன்

வவுனியா


தோழர் செல்வநாயகம் அம்பிகைபாலன் (நிவாஸ்)
(வவுனியா இராணுவப் பொறுப்பாளர்)
,, சீராளன் (மாயக்கண்ணன்)

மட்டக்களப்பு (பருகாமம்)


தோழர் ஈழமதிந்தன் (தமிழன் குரல்)

கடந்த 08.02.85 ல்

ஆழ் கடலில் வைத்து, ஸ்ரீலங்கா கடற்படையுடன் இறுதி வரை போராடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட தோழர்களின் 1வது நினைவு ஆண்டு, தோழர்கள், பாண்டி, சுதாகரன், ரொபேட், இரவீந்திரன், மோகன்.



தமிழீழ விடுதலைக்குத் தம் உயிர் ஈந்த கழக மெழுகுவத்திகள்!



01.
03. கிருஷ்ணசாமி
82. கிருஷ்ணகுமார்

24.
ஜெயச்சந்திரன் 04.
பார்த்தீபன் 84.

Published by: Thamileelam Information Bureau,
B.M.Box 1916, London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்